<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 302 / 2025 நாள்: 06.04.2026 வா.சா.1– சிவக்குமார்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்து 14 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. அதனுடைய சர்வே எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி தாவா சொத்தை எனது தகப்பனார் எப்போது கிரையம் வாங்கினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்திற்குரிய ஆவணங்கள் எனது தகப்பனார் கைவசம்தான் உள்ளது. எனது பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு தாவா சொத்தை எனது தந்தை தான் பராமரித்து வருகிறார் என்று சொன்னால் சாட்சி தானும் சேர்ந்து பராமரித்து வருவதாக கூறுகிறார். எனக்கு எழுதி கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணத்தில் அவரும் தாவா சொத்தை அனுபவித்து வர வேண்டுமென்று எனது தந்தையார் எழுதி கொள்ளவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்றிதழ்களை நான் 2019 ல் பார்த்துள்ளேன், ஆனால் அது ஞாபகம் இல்லை. தாவா சொத்தை எனது தந்தையார் கிரையம் வாங்கிய பிறகு எனது தகப்பனாரும், சகோதரரும் சேர்ந்து உடுமலைப்பேட்டை கனரா வங்கியில் அடமானம் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அடமான கடன் எதற்காக வாங்கினார்கள் எனக்கு ஞாபகம் இல்லை. 2016 வருடம் எனது தந்தையாரும், சகோதரர்களும் கடனை அடைத்தார்கள் எந்த வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தந்தையார் தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு வேறு யாருடனும் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளவில்லை. 2016ம் ஆண்டு எனது தந்தை தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு வேலுச்சாமி என்பவருடன் கிரைய ஒப்பந்தம் செய்தார் என்று

சொன்னால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். 2016ல் ஆண்டு எனது தந்தை தாவா சொத்தை பரணி என்பவரிடம் அடமானம் வைத்துள்ளார் என்று சொன்னால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். எனது தகப்பனார் மேற்படி அடமானம் மற்றும் கிரைய ஒப்பந்தம் எதற்காக எற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக என்னென்ன ஆவணங்களை எனது தகப்பனார் ஏற்படுத்தினார் என்று எனது தகப்பனார் சொல்லித்தான் எனக்கு தெரியும், நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுப்பதற்கு முன்பாக தான் மேற்படி அடமானம் மற்றும் கிரைய ஒப்பந்தத்தை எனது தந்தையார் தீர்த்தார் என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கில் எனது தகப்பனார் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக் கொண்ட 2012ல் வருட கிரைய ஒப்பந்தம் காலவரையறை சட்டத்ததால் பாதிக்கப்பட்டள்ளது என்னுடைய வாதம் என்று சொன்னால் சாட்சி ஒப்பந்தமே நாங்கள் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்று கூறுகிறார். நிரப்பப்படாத முத்திரைத்தாளில் உள்ள எனது தந்தையின் கையொப்பத்தை பயன்படுத்தி பொய்யான கிரைய ஒப்பந்தத்தை பிரதிவாதி ஏற்படுத்தியுள்ளார் என்றால் எனது வாதம் என்றால் சரிதான். 2012ம் ஆண்டு எனக்கு 21 வயது. அப்போது நான் கல்லூரியில் படித்தேன் என்றால் சரிதான். எனது தந்தையார் தாவா சொத்து சம்பந்தமாக 2012ம் ஆண்டு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினாரா இல்லையா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் ஒப்பந்தம் ஏற்படுத்த வில்லை என்று சாட்சி கூறுகிறார். எனது தகப்பனார் பிரதிவாதியிடம் எதற்காக கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்போது தரிசாக தான் உள்ளது. தாவா சொத்தில் எப்போது ஆழ்துளை கிணறு போட்டார்கள் எனக்கு ஞாபகம் இல்லை. 20 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்து தரிசு நிலமாக தான் உள்ளது. தாவா சொத்திற்கு வேலி எதுவும் இல்லை. எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம்

எழுதி கொடுக்கும் போது எனது தகப்பனாருக்கு எவ்வளவு கடன் இருந்தது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி ஏற்றுதலை ஆற்றுகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிதாக கேள்விப்பட்ட பிறகு எனது தகப்பனார் சென்று உறுதி செய்த பிறகு தளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலிசார் வழக்கு தாக்கல் செய்ய சொன்னார்கள் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் பிரதிவாதியை போலிசார் அழைத்து விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பிரதிவாதியுடன் தாவா சொத்து சம்பந்தமாக ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றும், பின்னிட்டு கால நீட்டிப்பு ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றும், பிரதிவாதிக்கு தாவா சொத்து கிடைக்கக்கூடாது என்று, எனது பெயருக்கு எனது தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கி இருந்தார் என்றும், தாவா சொத்தை விற்பனை செய்யவதற்காக பிரதிவாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டு, கிரைய தொகையில் மீதத்தொகை ரூ.1000 மட்டும் எனது தந்தை பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. கால நீட்டிப்பு ஆவணத்தை ஏற்படுத்தும் போது, எனது தந்தை மீத கிரைய தொகை ரூ.1000த்தையும் பெற்றுக்கொண்டார் என்றும், எப்போது வேண்டுமென்றாலும், பிரதிவாதி பெயருக்கு கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுப்பதாக எனது தந்தை உறுதியளித்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மீதான அடமானத்தையும், கிரையத்திற்கு முன்பாக தீர்த்து விடுவதாக எனது தந்தை உறுதியளித்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை அடமானத்தை தீர்த்த பிறகு, எனது பெயருக்கும், எனது சகோதரர் பெயருக்கும் செட்டில்மெண்ட் ஆவணத்தை வேண்டுமென்றே ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் கோரியுள்ள ஏற்றுதலை ஆற்றுதலை பரிகாரத்தை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.06 17:57:16 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.